நாள்: 22.06.2026
OS. 10/2025
பெயர் சரவணக்குமார்
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u> (2ம் பிரதிவாதி தரப்பு)

என்னுடைய வீட்டை ஒத்தி கேட்கும்போது ரூ.3,50,000/- பணம் கொடுக்கும்போது பிரதிவாதிகள் மற்றும் புரோக்கர் குமார் மற்றும் 2 நபர்கள் ஆகியோர் வந்தார்கள். அந்த 2 நபர்கள் 2ம் பிரதிவாதியின் தந்தையும், சகோதரரும் என்றால் அது எனக்கு தெரியாது. மீதமுள்ள 1 லட்சத்தை நான் 1ம் பிரதிவாதியிடம் கேட்ட போது அவர் 2ம் பிரதிவாதியின் சகோதரர் Gpay மூலமாக பணம் அனுப்புவதாக சொன்னார் அதன்படி செல்வகுமார் 95,000/-த்தை Gpay மூலமாகவும், மீதமுள்ள 5,000/- 2ம் பிரதிவாதி Gpay மூலமாகவும் அனுப்பி வைத்தார். நான் அசல் ஒத்தி பத்திரத்தில் நான் வரவு வைத்துள்ளேன். மேற்படி சங்கதிகளை என்னுடைய பிராது மற்றும் முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தரப்பில் என்னை குறுக்கு விசாரணை செய்ளயும் போது 1ம் பிரதிவாதி 1 லட்சம் பணம் கொடுத்ததாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு விவாகரத்து வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். முதலில் கொடுத்த ரூ.3,50,000/- பணம் என்னிடம் 1ம் பிரதிவாதி ராஜேஸ் தான் கொடுத்தார். 2ம் பிரதிவாதி பிரியங்கா உடன் இருந்தார். ரூ.3,50,000/-த்தை யார் தயார் செய்து கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. 02.12.2021ல் குத்தகை ஒப்பந்தம் பிறப்பித்துக்கொண்டோம். 11.10.2021 ல் HDFC வங்கியில் 2ம் பிரதிவாதி தனிநபர் கடனாக ரூ.3,00,000/- அவர் தந்தையிடம் ரூ.50,000/- சேர்த்து 3,50,000 /- 2ம் பிரரிவாதி பிரியங்கா தான் கொடுத்தார் என்ற விவரத்தை அவர் சொல்லி என்னிடம் பணம் கொடுத்தார் என்றும், தற்சமயம் அதை மறுத்து சாட்சிய்ம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாடகை ஒப்பந்தத்தின் அசல் 2ம் பிரதிவாதியிடம் உள்ளது. 2ம் பிரதிவாதி அசல் ஒப்பந்தம் தன்னிடம் இருப்பதாகவும், அதனால் என்னிடம் ரூ.4,50,000/- த்தை தருமாறு கேட்டார். நான் ஒப்பந்தம் 2 நபர்கள் பெயரில் இருப்பதால் பிரதிவாதிகள் இருவரும் சேர்ந்து வந்தார் பணத்தை தருவதாக சொன்னேன். 2ம் பிரதிவாதியிடம் நான் பணத்தை கொடுத்து ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ள தயாராக இருந்தேன் என்றும், அவர் கணவர் பிரச்சனை செய்ததால்

பணத்தை தரவில்லை என்றால் சரியல்ல. கூடலூரை சேர்ந்த ராமர் என்பவரை வைத்து பஞ்சாயத்து பேசினோம். பஞ்சாயத்து பேசும்போது 1ம் பிரதிவாதி, அவர் மனைவி போட்ட வழக்குகளை வாபஸ் பெற்றால் தான் தொகையை பெற்றுக்கொள்ள அனுமதிப்பேன் என பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை எனக்கு நேரடியாக தெரியாது. புரோக்கர் குமார் மூலமாக தான் தெரியும். குமாருக்கு தான் எல்லாவிசயமும் தெரியும். குமாரை விசாரிக்க தயாராக உள்ளேன். வார்டு எண்.8, காந்திகிராமம்,கூடலூரில் என் சொந்தவீடு உள்ளது. நான் ஒத்திக்கு கொடுத்த வீடு என் வீட்டுக்கு பின்புறம் உள்ளது. பிரியங்கா தான் ரூ.4,50,000/-த்தை என்னிடம் கொடுத்தார் என்றும், 1ம் பிரதிவாதி மிரட்டியதால் தான் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சுமார் 6 மாதத்துக்கு முன்னர் என்னை தொடர்பு கொண்டார். 1ம் பிரதிவாதி என்னை தொடர்பு கொண்டு தன்மீது வாரண்டு இருப்பதால் என்னால் வரமுடியாது என சொன்னார். நானும், 1ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.06.22 17:29:57 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்